# புதுக்கோட்டை மாவட்ட செய்திகள்

தினத்தந்தி திருச்சி 8-11-2007 17

## சித்த, ஓமியோபதி மருத்துவர்களுக்கு பயிற்சி

விராலிமலை, நவ.8–

விராலிமலை களநிறுவனமான வெஸ்வா தொண்டு நிறுவனத்தின் சார்பில் திட்டம் மற்றும் ஓமியோபதி மருத்துவர்களுக்கு இசை வேளாளர் திருமண மண்டபத்தில் பயிற்சி முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் லீலாவதி கணேசன் தலைமை தாங்கினார். கவுன்சிலர் தமிழ்செல்வி மோகன் முன்னிலை வகித்தார். வெஸ்வா நிறுவன இயக்குனர் ராஜேஸ்கண்ணா வரவேற்றார். ராஜாளிபட்டி எம்.ஏ.சி.டி. தொண்டு நிறுவன இயக்குனர் சிரில் அக்லெக்ஸ் குத்துவிளக்கு ஏற்றி முகாமை தொடங்கி வைத்து வைத்திய முறைகள் பற்றி பேசினார்.

புதுக்கோட்டை ஓமியோபதி டாக்டர் பூபதி, டாக்டர் பாரதி ஆகியோர் பேசினார்கள். முகாமில் தொழில் அதிபர் ஜெமினி சூசைமாணிக்கம், ஏழுமலை மற்றும் தொண்டு நிறுவன நிர்வாகிகள், சித்த வைத்தியர்கள் கலந்து கொண்டார்கள்.